# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 49/2021

PW1 – திருமதி.இருதயமேரி நாள். 21.09.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. எத்தனை சொத்துக்களுக்கு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இடங்கள் ஞாபகம் உள்ளது, எத்தனை சொத்துக்கள் என்று தெரியவில்லை. தாவா சொத்துக்களுக்கான சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடன் உடன்பிறந்தவர்கள் யார் யார் என்றால் சந்தனமேரி, சமாதானம், வேதமாணிக்கம் என்கிற அனிதா, விக்டர் ஆவார்கள். தாவா சொத்துக்கள் எனது தந்தை ராஜேந்திரன் என்பவருக்கு எவ்வகையில் பாத்தியப்பட்டது என்றால் பூர்வீகமாகவும், கிரையம் மூலமாகவும் பாத்தியப்பட்டது. எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1983 ல் ஆனது. எனது அக்கா சந்தனமேரிக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் ஞாபகம் இல்லை. வேதமாணிக்கம் என்கிற அனிதாவுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் சுமார் 30 வருடங்களுக்குள் இருக்கும்.

2. எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் சுமார் 28 வருடங்களுக்கு முன்னர் இறந்தார். என்னை எனது தந்தை உயிருடன் இருக்கும்போது திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். நான் திருமணம் ஆகி எனது கணவர் ஊரில் இருந்து வருகிறேன். எனது அக்கா எந்த ஊரில் குடியிருந்து

வருகிறார் என்றால் பிச்சங்குறிச்சியில் குடியிருந்து வருகிறார். தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது இல்லை என்று சொன்னால் சரியல்ல, எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது தான்.

3. என் உடன்பிறந்தவர்களிடம் எனக்கு திருமணம் ஆனதில் இருந்து தாவா சொத்துக்களில் பாகம் கேட்கவில்லை என்றால் சரிதான். எனது சகோதரர் சமாதானம் வீடு கட்டியுள்ள தாவா 12 வது இலக்க சொத்தில் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது இல்லை என்று சொன்னால் சரியல்ல, எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது தான், அதில் ஆடு மாடு கட்டி வைத்திருந்தோம். மேற்படி 12 வது இலக்க சொத்தானது அரசுக்கு பாத்தியப்பட்டது என்றும் அரசாங்கத்தால் ஒப்படைப்பு பட்டா மூலம் சமாதானம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 12 வது இலக்க சொத்தில் சமாதானம் ஓட்டுவீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் மேற்படி சொத்தில் ஓடு மற்றும் ஓலைக்கொட்டகை இருந்தது அதில் ஆடு மாடு கட்டி வைத்திருந்தோம் மேலும் சமாதானம் என்பவரும் அதில் குடியிருந்து வந்தார்.

4. மேற்படி சொத்தில் உள்ள ஓட்டுவீட்டிற்கு வரிரசீதுகள் மற்றும் மின்இணைப்புகள் எனது சகோதரர் சமாதானம் பெயரில் ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி ஓட்டுகொட்டகையை இடித்து விட்டு அவர் பெயரில் பட்டா வாங்கி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி 13 வது இலக்க தாவா சொத்தில் வீடுகட்டி அவர் பெயரில் பட்டா வாங்கி அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் மேற்படி இடத்தில் எனது தந்தை ஓட்டுவீடு கட்டியிருந்தார், தற்போது ஏமாற்றி பட்டா வாங்கி அனுபவம் செய்து வருகிறார். 13 வது இலக்க சொத்தை பொறுத்தவரை எனது சகோதரர் விக்டர் அனுபவம் செய்து வந்து அவர் இறந்த பின்னர் அவரது மகன் 5ம் பிரதிவாதி அவரது பெயரில் அரசாங்கத்தில் இருந்து ஒப்படைப்பு பட்டா வாங்கி மேற்படி இடத்தில் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்,

பட்டா அவர் பெயரில் ஏமாற்றி வாங்கியுள்ளார்.

5. 16 வது இலக்க சொத்து எனது தந்தை பெயரில் இல்லை என்றும் பிச்சை, செபஸ்தியான், சந்தனம், மைக்கேல், சூசை, சந்தியாகு, சந்தியாகு ஆகியோர்கள் பெயரில் தான் இருந்து வந்தது என்றும் மேற்படி நபர்கள் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததின் அடிப்படையில் 16 வது இலக்க சொத்தானது 1ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அவரது பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது மேற்படி கிரையம் எதுவும் நடைபெறவில்லை. எனது தந்தை ராஜேந்திரன் 29.09.1987 அன்று 2 வது இலக்க சொத்தை ரூ.4,000/−க்கு 1ம் பிரதிவாதியின் மனைவியிடம் எனது திருமணத்திற்கு ஒத்தி வைத்தார் என்றால் சரியல்ல, எனது சகோதரி வேதமாணிக்கம் என்கிற அனிதா என்பவர் திருமணத்திற்கு தான் ரூ.2,500/−க்கு என் தந்தை சொல்லி நான் ஒத்தி வைத்தேன், பின்பு என் தந்தை அதை மீட்டுவிட்டார். மேற்படி ஒத்தியானது பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

6. மேற்படி ஒத்தியானது மீட்கப்படவில்லை என்றும் 1ம் பிரதிவாதியின் மனைவி பெயரில் இருந்த ஒத்தியை 1ம் பிரதிவாதி ஒத்தி தொகையை திருப்பி கொடுத்து 1ம்பிரதிவாதி அவரது பெயரில் பட்டா மாற்றம் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 2 வது இலக்க சொத்தை 1ம் பிரதிவாதி சுமார் 35 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான், நான் திருமணம் ஆகி வேறு ஊருக்கு சென்றுவிட்டதால் அவர் அனுபவம் மட்டும் செய்து வந்தார். 14 மற்றும் 15 வது இலக்க தாவா சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றும் எனது சகோதரர் விக்டரும் 1ம்பிரதிவாதியும் அனுபவம் செய்து வந்து 14 வது இலக்க சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டும், 15 வது இலக்க சொத்து 5ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால்

அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள், மேற்படி சொத்துக்களானது அவர்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை.

7. 6 வது இலக்க தாவா சொத்தை பொறுத்த வரை எனது தகப்பனார் மற்றும் அந்தோணிமுத்து மகன் ஜோசப் பெயரில் கூட்டுபட்டாவாக இருந்து வந்தது என்றும் மேற்படி ஜோசப்பிடம் இருந்து மேற்படி இடத்தை 1ம்பிரதிவாதி கிரையம் பெற்று 30 ஆண்டுகளுக்கு மேலாக பட்டா மாறுதல் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான், எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் எனது சகோதரர்களான சமாதானம் மற்றும் விக்டர் இமானுவேல் ஆகியோர்கள் அனுபவம் செய்து வருகின்றனர். மேற்படி கிரையங்கள் எதுவும் வாங்கப்படவில்லை.

8. 7 வது இலக்க தாவா சொத்தானது பொன்னையா தேவர் மகன் காந்தி என்பவர் பெயரில் இருந்து வந்து அவரிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றால் எனது தந்தை தான் கிரையம் வாங்கினார், 1ம் பிரதிவாதி வாங்கவில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தையும் எனது சகோதரர்கள் அனுபவம் செய்து வரும் விவரம் எனது சகோதரிகளுக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். எனது குடும்ப விழாக்களில் மற்றும் எனது சகோதரிகளின் குடும்ப விழாக்களில் எனது சகோதரர்கள் சீர்செய்தார்களா என்றால் சீர் எதுவும் செய்யப்படவில்லை. எனது சகோதரர்கள் எனக்கும், எனது சகோதரிகளுக்கும் தகுந்த சீர் செய்தார்கள் என்றும் செய்யவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 12 இலக்க சொத்தில் ரூபாய் 20 இலட்சம் மதிப்புள்ள தார்ஸ்வீடு கட்டியுள்ளார் என்றால் எனது தந்தை இறந்ததில் இருந்து சொந்த ஊருக்கு செல்லவில்லை, அதனால் தெரியாது. 1ம் பிரதிவாதியும், 5ம் பிரதிவாதியும் வீடு கட்டியுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றும் தெரியாது என வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களின் மதிப்பு ரூபாய் 1 இலட்சத்திற்கு மேல் இருப்பதால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தகுதியற்றது என்றும்

அதனடிப்படையுல் தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

9. எனது சகோதரர்கள் எனக்கு சீர்வரிசை செய்தார்கள் என்றும் தாவா சொத்துக்கள் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பதாலும் நான் பாகம் கேட்க தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் சொல்லப்பபட்டுள்ள வழக்குமூலம் சரியல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும், 5ம் பிரதிவாதியும் 30 ஆண்டுகளுக்கு மேலாக பட்டா மாறுதல் செய்து அனுபவம் செய்து வருவதால் அந்த சொத்தில் பாகம் கேட்க உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை